[10th August 1960

(ஆ) அப்படியாயின், அதை அரசாங்கம் என்ன செய்திருக் கிறது?

THE HON. SRI V. RAMIAH: (*a*) & (*b*) One anchamuga Lingam was unearthed in 1943 and it was installed in a temple under the order of Sri Sankaracharya Mutt, who are in management of the temple.

SRI A. VEDARATHNAM: இம்மாதிரி பூமியில் அகப் படுகின்ற விக்கிரகங்களையெல்லாம் சர்க்கார் என்ன செய்கிறார் கள்? இது விஷயத்தில் அவர்களுடைய கொள்கை என்ன? சில இடங்களில் அதை அந்தந்த ஆலயங்களில் கொடுத்து பூஜை செய்ய அனுமதிக்கிறார்கள். சில இடங்களில் அப்படி அகப்படுகின்ற விக்ரகங்களை மியூஸியத்திற்குக் கொண்டு போகிறார்கள். அப்படிச் செய்யாமல் அந்தந்த ஆலயங்களில் அந்த விக்ரகங்களைக் கொடுத்து பூஜை செய்வதற்கு அனுமதிப் பார்களா?

THE HON. SRI V. RAMIAH: நல்ல பழுது இல்லாமல் இருக்கும் விக்ரகங்கள் கிடைத்தால், ஆங்காங்கு இருக்கக்கூடிய கோவில்களில் வைத்து பூஜை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார் கள்.

SRI M. KARUNANITHI: பஞ்சமுக லிங்கம் என்று கூறப் படுகிறது. ஐந்து முகங்களா அல்லது வறுமையில் அடிபட்ட முகமா? (சிரிப்பு)

(பதில் இல்லை)

SRI V. K. KOTHANDARAMAN: முகம் மாத்திரம் பஞ்சமா? அல்லது கால், கை, வயிறு எல்லாமே பஞ்சமாக இருக்கிறதா?

(பதில் இல்லை)

Kabaleeswarar Devasthanam

MR. SPEAKER: The hon. Member, Sri K. Vinayakam, is not in his seat. The question and answer will be printed in the proceedings.

* 75 *Q*.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state on what basis the trustees of Kabaleeswarar Devasthanam, Mylapore, Madras are appointed?

THE HON. SRI V. RAMIAH: The trustees are appointed according to the scheme settled by the Hindu Religious and Charitable Endowments authorities.

Cashewnut

MR. SPEAKER: The hon. Member, Sri K. R. Viswanathan, is not in his seat. The question and answer will be printed in the proceedings.

10th August 1960]

*76 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any petition, dated 23rd June 1960 from the villagers of Udaiyarpalayam taluk requesting to bring cashewnut crop under the Regulated Market system; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) No, Sir.

(b) Does not arise.

Sulphur

*77 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1959-ஹு டிசம்பர்மீ 15-ம் தேதி நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 181-க்கு அளித்த பதிலையொட்டி போளூர் தாலூகா தாளியார் பங்களாவுக்கு அருகில் கிடைக்கும் கந்தகத்தைத் தோண்டி எடுப்பது எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: The Director, Geological Survey of India, has reported that the Geological Survey of India are short of drilling equipment and that the work will be taken up during the Third Plan period as soon as a drill becomes available.

SRI S. M. ANNAMALAI: நானும் இந்தச் சட்டமன்றத்தில் 3-1/2 ஆண்டுகளாக இருக்கின்றேன். இதுபற்றி 4 கேள்விகள் போட்டு, அடுத்தாற்போல் 5-வது கேள்வி போட்டிருக்கிறேன். இந்த ஐந்து கேள்விகளுக்கும் அமைச்சர் அவர்கள் இதே மாதிரி தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாடு இருக்கிற நிலைமையில் இந்தக் கந்தகத்தை தோண்டி எடுத்தால் மிகவும் கிராக்கியாக இருக்கும். இந்த நிலைமையை ஒட்டி இந்த கந்தகத்தை தோண்டி எடுப்பதற்கு மத்திய சர்க்காரை அணுகி கூடிய சீக்கிரம் துரிதமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: ஐந்து கேள்விகள் போடுவதன் மூலம் ஒரு டிரில் கிடைக்குமானால், இன்னும் ஐந்து கேள்விகள் போடலாம் கனம் அங்கத்தினர். டிரில் அகப்படவில்லை என்பதுதான் காரணம்.

Improvement of tanks

*78 Q.—SRI K. GOPALA KOUNDER: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா, செம்மேடு கிராமத்தில் உள்ள P.W.D. ஏரியை அபிவிருத்தி செய்யத் திட்டம் தயாரிக்கப்பட்டதா?

(ஆ) அப்படியானால், எப்பொழுது வேலை துவக்கப்படும்?